ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42(அ) வட்டம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் இரா. இலட்சுமணன், ஆகியோர் முன்னிலையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்வில் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், என். மருதுகணேஷ், ஆர்.வெற்றிவீரன், நாகம்மை கருபையா, நேதாஜி யு.கணேசன், இர.பொன்இளவரசன், கி.ராஜேந்திரன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், வெ.சு.சத்தியநாரயணன், ப.சோமசுந்தரமூர்த்தி, வி.வி.ரமேஷ், எஸ்.எம். பரசுராமன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், கே. தேவன், இ.ஏழுமலை, ப.ஆ.சண்முகம், மா.ரூபசங்கர், பி.கே.மூர்த்தி, கே.தேவதாஸ், கே.மணி, ஜி.எம்.பிரபு, கே.சங்கர், த.குமரேசன், ச.குமரன், வீ.செல்வமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனைப்படி மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் 100 நாள் (நூறு நாள்) வேலை திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயலையும்–ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் காரனோடை பஜார் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி மற்றும் தலைமை கழக பேச்சாளர் சைதை.சாதீக் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மாநில. மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மற்றும் 100 நாள் வேலைவாய்ப்பில் பணிபுரியும் 1000–க்கும் மேற்பட்ட மகளிர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசால் - புதுச்சேரிக்கு ரூ. 1,423 கோடி இழப்பு!

கண்டன ஆர்ப்பாட்டத்தில் – எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பகீர் குற்றச்சாட்டு!

புதுச்சேரி, டிச. 27 - மகாத்மா காந்தி பெயரில் இருந்த தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை விக்சித் பாரத் - ரோஜ்கர் & அஜீவிகா மிஷன் எனும் பெயராக மாற்றிய ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்தும், கிராமப்புற தொழிலாளர்களின் வேலை உரிமையை பறிக்கும் இச்சட்டத்தை திரும்ப பெற்றிட வலியுறுத்தியும், இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் நேற்று காலை 10.00 மணி அளவில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகம் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமை தாங்கினார்.

காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் ராமச்சந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி முதன்மைச் செயலாளர் தேவ பொழிலன், மதிமுக கபிரியேல், திராவிடர் கழக மாநில செயலாளர் வீரமணி, மனிதநேய மக்கள் கட்சி சகாபுதீன், சிபிஐ நிர்வாகக் குழு அந்தோணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மகாத்மா காந்தி பெயரில் இருந்த 100 நாள் வேலை திட்டத்தை ராமர் பெயரில் மாற்றிய ஒன்றிய பாஜக அரசை கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதில், திமுக சட்டமன்ற உறுப்பினர் வி. அனிபால் கென்னடி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா சரவணன், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல், ஆறுமுகம், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், ராமசாமி, செல்வநாதன், தர்மராஜ், சண்முகம், சக்திவேல், அமுதா குமார், நர்கீஸ், பசுபிக் சங்கர், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், நடராஜன், தியாகராஜன், இளஞ்செழியப்பாண்டியன், சீத்தாராமன், கலிய கார்த்திகேயன், காங்கிரஸ் நிர்வாகிகள் ராஜ்குமார், ஹசன், முருகையன், சத்தியமூர்த்தி, சிபிஎம் பெருமாள், சீனுவாசன், மதிமுக மாசிலாமணி, விசிக அர்ச்சுனன், பழநி, ரமேஷ், பரமசிவம், சிபிஐ மோதிலால், சீனுவாசன், கோவிந்தராஜ், சரவணன், திமுக அணி நிர்வாகிகள் சீனு. மோகன்தாசு, வீரய்யன், ரமணன், குலசேகரன், காயத்ரி, சுமதி, முகம்மது ஹாலித், ஆறுமுகம், அங்காளன், கதிரவன், கோபி, காளி, தேசிகன், மிலிட்டரி முருகன், சபரிநாதன், செல்வநாதன், சுப்ரமணி, பாலகுரு, அன்புநிதி, அருள்மணி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

வில்லியனூர் தொகுதி திமுக செயலாளர் மணி கண்டன் நன்றி கூறினார்..

ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசியதாவது: -தேசிய ஊரக வேலை உறுயளிப்புத் திட்டம் 2005-ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்டு, அத்திட்டம் 2009 காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2 அன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்திட்டத்தை கிராமப்புற மக்கள் 100 நாள் வேலை என்று அழைக்கின்றனர். இத்திட்டம் கிராமப்புற ஏழை மக்களுக்கு சிறந்த முறையில் செயல்பட்டு வந்தது. ஒன்றியத்தில் பாஜக ஆட்சி அமைந்ததில் இருந்து இத்திட்டத்திற்கு தொடர்ந்து முட்டுக் கட்டை போட்டு வந்தனர்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுச்சேரியில் இத்திட்டம் ஆண்டுக்கு வெறும் 23 நாட்கள் மட்டுமே வேலை நடந்துள்ளது. இந்த இரட்டை என்ஜின் ஆட்சியில் 2020-21-ஆம் ஆண்டில் சராசரி 22 நாட்கள் 2021-22-ஆம் ஆண்டில் 16 நாட்கள், 2022-23-ல் 20 நாட்கள், 2023-24-ல் 23 நாட்கள், 2024-25-ல் 22 நாட்கள், 2025-26- ல் 20 நாட்கள் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற மோசமான ஆட்சியை எங்கும் பார்க்க முடியாது. இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ 300 கோடி வழங்க வேண்டும். ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 176 கோடி மட்டுமே ஒன்றிய அரசு வழங்கி உள்ளது. இத்திட்டத்தில் புதுச்சேரி மாநிலத்திற்கு ரூ.1,423 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் பங்களிப்பை புதுச்சேரிக்கு தராமல் பாஜக அரசு வஞ்சித்துள்ளது. இந்திய மக்களின் மனதில் இருந்து மகாத்மா காந்தி பெயரை நீக்க முடியாது. ஒவ்வொரு குடும்பத்திலும் குலதெய்வமாக காந்தி உள்ளார். பக்கத்தில் இருக்கும் அண்டை மாநிலத்தில் 75 நாட்கள் வேலை கொடுக்கப்படுகிறது. ஊழல் அதிகாரிகள் அதிகரித்துள்ளதும் இத்திட்டம் முடங்குவதற்கு காரணமாக உள்ளது. 100 நாள் திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்திருந்தால் அதன் மூலம் ஏழைகளுக்கு பணம் கூலியாக சென்றிருந்தால் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு இருக்கும்.

100 நாட்களே முழுமையாக கொடுக்க முடியாத ஒன்றிய அரசு தற்போது 125 நாட்கள் வேலை கொடுப்போம் என்று கூறியிருக்கிறது. இது எப்படி சாத்தியம் மாநில அரசு 40 சதவீத நிதி பங்களிப்பு என்றால் திவால் ஆன புதுச்சேரி அரசால் இத்திட்டத்தை எப்படி செயல்படுத்த முடியும். மற்ற மாநிலங்கள் போல் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த புதுச்சேரி அரசால் முடியாது. இங்குள்ள அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லை. இதனால் ஸ்மார்ட் சிட்டி திட்டம், சுற்றுலா வளர்ச்சித் திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் தோல்வி கண்டுள்ளது. எந்த திட்டத்தையும் முழுமையாக செயல்படுத்த முடியாததுப்பில்லாத அரசாங்கம். இப்படி புதுச்சேரி மக்களை தொடர்ந்து ஏமாற்றி புதுச்சேரியை சுடுகாடாக மாற்றி வரும் என். ஆர்.காங்கிரஸ், பாஜக கூட்டணி அரசை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயாராகி விட்டனர். புதுச்சேரி அரசின் முகத்திரை கிழித்தெறியப்பட வேண்டும். அம்பானி, அதாணிக்கு கடன் தள்ளுபடி செய்கிற ஒன்றிய அரசு ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் 100 நாள் திட்டத்திற்கான பணத்தை கொடுக்காமல் அவர்கள் வயிற்றில் அடித்துள்ளது. மகாத்மா காந்திக்கு செய்த பாவமும், ஏழை, எளிய மக்கள் வயிற்றில் அடிக்கும் பாவமும் உங்களை சும்மா விடாது. கொள்ளை அடிக்க பல வழிகள் உண்டு. ஏழை மக்கள் வயிற்றில் அடிக்காதீர்கள்.

இவ்வாறு பேசினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 310 வது நாள்!

கொளத்தூர் கிழக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,டிச.27- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 310 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (26.12.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 68அ, ஜவகர் நகர் முதல் சர்குலர் சாலை, முதல்வர் சட்டமன்றம் அலுவலகம் அருகில். 2) வட்டம் 67அ, ஒத்தை வாடை தெரு, சாமுண்டீஸ்வரி நகர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ். பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ் குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திர சேகர், எஸ்.முருகன், எம். பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமை! வை. ம. அருள்தாசன் ஏற்பாடு!

திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் சுனாமி நினைவு தின அஞ்சலி நலத்திட்ட உதவிகள்!

ஆர். நவக்குமார், தழவை எஸ். ரஞ்சித், டி. சக்கரவர்த்தி, எம்.எல். வேலன், எம். ராமு முன்னிலை!

சென்னை,டிச.27- கடந்த 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமி ஆழிபேரலையில் சிக்கி எண்ணற்ற உயிர்கள் பறி போனது.

அதே நாளில் உயிர்நீத்த உறவுகளுக்கு ஆண்டு தோறும் அஞ்சலி செலுத்தப் பட்டு வருகிறது.

மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர். நவக்குமார், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் தழவை எஸ். ரஞ்சித், டி. சக்கரவர்த்தி, எம். எல். வேலன், எம். ராமு ஆகியோரின் முன்னிலையில் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக மீனவர் அணி சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் தலைமையில் சுனாமி ஆழிப்பேரலையில் உயிர் நீர்த்த சொந்தங்களை நினைவு கூறும் தினமான டிசம்பர் 26 அன்று சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட பாரதியார் நகர் கடற்கரையில் அஞ்சலி செலுத்தப் பட்டது.

சுனாமியில் உயர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற வகையில் 500 க்கும் மேற்பட்ட பெண்கள் பால் குடத்தோடு பாரதியார் நகர் சகாய மாதா தேவாலயம் அருகில் அமைதி ஊர்வலம் துவங்கியது . பிரதான சாலையில் வழியாக கழக நிர்வாகிகள் பொதுமக்களோடு அமைதிப் பேரணியாக கடற்கரைக்குச் சென்றடைந்து , ஆழிப்பேரலையில் உயிர் நீர்த்த சொந்தங்களை நினைவு கூறும் வண்ணம் பால் தெளித்து மலர்த்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து மீனவ பெண்கள் மற்றும் பொது மக்கள் 500 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டது.

இந்நிகழ்வில் மத்திய பகுதி கழக செயலாளர் ஏ. வி.ஆறுமுகம் எம்.சி, பகுதி பொருளாளர் M.வஜ்ரவேல் வட்ட கழக பொறுப்பாளர் D. சேகர் எக்ஸ்.எம். சி, மாவட்ட பிரதிநிதிகள் ஆர். தினேஷ்குமார் எம். சந்திரகுமார் ந. ராம்குமார் ஜி. தினேஷ் எஸ். கணேஷ் எஸ். ஆர். மலைராஜ் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஆர்.மோகனசுந்தரம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன் வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.ஹரிஹரன் பகுதி பிரதிநிதிகள் வை.சின்னையன், நக்கிரன், எம்.கார்த்திக் கே.செந்தில்குமார் புண்ணியமூர்த்தி டி. எஸ். L மணி, வை. பாலசுந்தரம், எஸ். ராஜேஷ் ஆர்.நரேன்குமார்,ம.சுந்தர் வி.ஹிம்மாவந்த், வி தன்ராஜ், ஜோ.குமரன்,பாண்டியன், பி. வேலு, பெரியநாயகராஜா, விஜி,சுபாஷ், ஆர்.மதன்குமார், டி. கண்ணன்,ஆர். விஜி, கே.கோகுல், எஸ். சேதுபதி ரேஷன் கடை, எஸ்.வினோத், எஸ்.நாகராஜ், லோகு, ஜேசிபி.முருகன்,எம். ராஜா, பெரிய ராஜா,சியா, குமார், ஏ. எஸ் .கணேசன், குணா, சரவணன், கே.பூங்கொடி, ஈ. பூங்கொடி சாமுண்டீஸ்வரி, ஆர்.வசந்தி ராஜ், வனிதா, புனிதா , ந.ராஜா, பா. அஜித், எம்.சந்தோஷ் ஜி. குணசேகரன், ஜி.கணேஷ் ஆர். எஸ். யுவராஜ், ஜெ.. மாரி, ராஜேஷ், போஸ் வினோத், ஜி.தினேஷ், முத்து முருகன்,எஸ்.சதீஷ், எஸ் யுவராஜ், வை.பிரபாகரன், எஸ். கௌதம், , தனசேகர், எஸ்.லோகேஷ், பா. யோகி, கார்த்திக் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், வானகரம் முதல் நிலை ஊராட்சி, மேட்டுக்குப்பம் பகுதியில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் MGNREGS ரூ.13.45 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கடையை சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, மாவட்ட அமைப்பாளர் எஸ்.பி.அருள், ஒன்றிய கழக நிர்வாகிகள் என்.ஜெயச்சந்திரன், என்.ரவி, ஜி.எம்.சாமிநாதன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.எம். பர்மன்அலி, எஸ்.நவீன்குமார், இ.தேவராஜ், மாவட்ட பிரதிநிதி கு.சதீஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

குஜராத் மாநிலத்தில் நிலநடுக்கம்:

ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆக பதிவு!

மக்கள் பெரும் அச்சம்!

கச்,டிச.27- இன்று அதிகாலை சுமார் 4:30 மணியளவில் குஜராத் மாநிலம் கச் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நில அதிர்வு ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் பூமியின் அடியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கத்தால் மக்கள் பெரும் அச்சமடைந்தனர்.

அதிகாலை நேரம் என்பதால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மக்கள், நில அதிர்வை உணர்ந்ததும் திடுக்கிட்டு எழுந்தனர். வீடுகளில் இருந்த மின் விசிறிகள் மற்றும் பொருட்கள் ஆடியதால் அச்சமடைந்த பொதுமக்கள், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். இந்த நிலநடுக்கம் சில நொடிகள் மட்டுமே நீடித்தது. நல்வாய்ப்பாக, இதில் உயிரிழப்புகளோ அல்லது பெரிய அளவிலான சொத்து சேதங்களோ ஏற்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னதாக, கடந்த டிசம்பர் 20ம் தேதி குஜராத்தின் பருச் மாவட்டத்திலும் நில அதிர்வு உணரப்பட்டது. அன்று காலை 4:56 மணியளவில் ரிக்டர் அளவு கோலில் 4.5 ஆகப் பதிவான அந்த நிலநடுக்கத்தின் மையம் ஜம்புசார் அருகே இருந்தது குறிப்பிடத்தக்கது.

குஜராத் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (GSDMA) தகவல்படி, கச் மாவட்டம் மிகவும் அபாயகரமான நில அதிர்வு மண்டலத்தில் (Active Seismic Zone) அமைந்துள்ளது. கடந்த 200 ஆண்டுகளில் குஜராத்தில் 9 பெரிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதில் பெரும்பாலானவை கச் பகுதியையே மையமாகக் கொண்டிருந்தன.

குறிப்பாக, 2001ஆம் ஆண்டு கச் புஜ் பகுதியில் ஏற்பட்ட 6.9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பெரும் பேரழிவை ஏற்படுத்தியது. அதில் சுமார் 13,800 பேர் உயிரிழந்தனர் மற்றும் 1.67 லட்சத்திற்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டத்தில் அடங்கிய பாகம் .123.126. இல் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் நடைபெற்றது. இதில் பகுதி கழகச் செயலாளர் ஜி துக்காராம் சிறப்புரையாற்றினார். உடன் வட்ட செயலாளர் டி. சுந்தரம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் லட்சுமி காந்தன், மாமன்ற உறுப்பினர் புத்தகரம் இ ஏழுமலை, எம் சரவணன், துரை ஸ்ரீராமுலு, கே.ரமணன், டாக்டர் ஜி.பார்த்தசாரதி, எஸ்பி கண்ணன், எல்.சண்முகம், சி.பரமேஸ்வரி, பி.வி. ராஜு, கே.நரேந்திரன், ஏ.வி. முருகன், பிஎஸ்என்எல் தயாளன், எம்.சீனிவாசன், சீ.உமா மகேஸ்வரி, வெங்கட்ராமன், கருணாநிதி, தே.முனியம்மாள், கோபிநாத், கமலக்கண்ணன், விக்னேஷ், வெற்றிவேல். டி.எஸ்உ.தயநிதி. தபு. கருணாகரன், குபேந்திரன், சுரேஷ்பாபு, பி.சந்திரசேகர், என்.ரவீந்திரன், யுவராஜ், வி.பாஸ்கர், டி.சுந்தர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.